ஆலந்தூர் தெற்கு பகுதி சார்பில் முதலமைச்சர் விரிவான காப்பீட்டு திட்ட அட்டை வழங்கும் விழா பகுதி செயலாளர் மண்டல குழு தலைவர் என். சந்திரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சரும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகசெயலாளர் தா.மோ. அன்பரசன் 500 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு அட்டையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் பி. குணாளன், பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ்.கே. இப்ராஹிம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டீ.பிரகாஷ், வட்ட செயலாளர்கள் ஜெ. நடராஜன், இ.உலகநாதன், 167 வது வார்டுமாமன்ற உறுப்பினர் துர்கா தேவி, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் பாண்டி செல்வி, விஜயலட்சுமி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நீலகிரி தேசிய அளவில் சிறந்த சுற்றுலா கிராமமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள "உல்லாடா கிராமமானது தேர்வானதை ஒட்டி அக்கிராமத்தை நேரில் சென்று ஊர் மக்களிடம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் வாழ்த்துகள் தெரிவித்தார். உடன் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

தீ விபத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் –

தீபாவளியையொட்டி பட்டாசுக் கழிவுகளை அப்புறப்படுத்த நடவடிக்கை!

மேயர் ஆர்.பிரியா தலைமையில் ஆலோசனை! துணை மேயர் ம.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, நவ. 9 - தீபாவளியை முன்னிட்டு, சேகரமாகும் பட்டாசுக் கழிவுகளை தனியாக சேகரித்து அன்றைய தினமே அப்புறப்படுத்துதல் மற்றும் தீ விபத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் நேற்று நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு சராசரியாக 6,150 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தண்டையார்பேட்டை, இராயபுரம், திரு.வி.க.நகர், அண்ணாநகர் மற்றும் அம்பத்தூர் (சில பகுதிகள்) மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளிலும், உர்பேசர் மற்றும் சுமீத் நிறுவனத்தின் சார்பில் தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர், அடையாறு, பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளிலும், சென்னை என்விரோ நிறுவனத்தின் சார்பில் திருவொற்றியூர், மணலி, மாதவரம் மற்றும் அம்பத்தூர் (சில பகுதிகள்) மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தீபாவளியின் போது, சேகரமாகும் பட்டாசுக் கழிவுகள் அபாயகரமான கழிவுகள் என்பதால், மாநகராட்சியின் சார்பில் இக்கழிவுகள் தனியாக சேகரிக்கப்பட்டு கும்மிடிபூண்டியில் உள்ள அபாயகரமான கழிவுகளை முறைப்படுத்தும் செயலாக்க நிலையத்திற்கு (Resustainability IWM Solutions Limited (Tamilnadu Waste Management Limited) Facility, Gummidipoondi) கொண்டு செல்லப்பட்டு வருகிறது.

அந்த வகையில், தீபாவளியை முன்னிட்டு, 11.11.2023 முதல் 13.11.2023 வரை மாநகரின் பல்வேறு பகுதிகளில் சேகரமாகும் பட்டாசுக் கழிவுகளை முறையாக அகற்றுவது குறித்தும், தீ விபத்து குறித்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் துறை அலுவலர்கள், உர்பேசர் சுமீத் நிறுவன அலுவலர்கள் மற்றும் சென்னை என்விரோ நிறுவன அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மேயர் ஆர். பிரியா தலைமையில் ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேயர் பேசும்போது தெரிவித்த தாவது:

தீபாவளியை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் பட்டாசுக் கழிவுகளை தனியாக அதற்கான வைக்கப்பட்டுள்ள பைகளில் சேகரித்து முறையாக பதப்படுத்தும் நிலையங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். இதற்காக ஒவ்வொரு மண்டலத்திற்கும் கனரக வாகனங்களை இப்பணிகளுக்காக ஒதுக்கி பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், தினந்தோறும் சேகரமாகும் பட்டாசுக் கழிவுகள் அன்றைய தினமே சாலை மற்றும் தெருக்களிலிருந்து அப்புறப்படுத்தி, பதப்படுத்தும் நிலையங்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும். பின்னர், இந்தக் கழிவுகள் முறையாக கும்மிடிப்பூண்டியில் உள்ள நிலையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

பட்டாசுக் கழிவுகளை முறையாகவும் பாதுகாப்புடனும் கையாளுவது குறித்தும், குப்பை களை தனியாகப் பிரித்து இல்லங்களில் குப்பை சேகரிக்க வரும் தூய்மைப் பணியாளர்களிடம் வழங்கிடவும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் பேட்டரியால் இயங்கும் வாகனங்களில் ஆடியோ மூலம் ஒலிபரப்பி விழிப்புணர்வினை ஏற்படுத்திடவும், இந்தப் பணிகளை பரப்புரையாளர்கள், பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஒருங்கிணைந்து மேற்கொள்ளவும், குப்பை கொட்டும் வளாகங்களில் தீ விபத்து ஏற்படாமல் தடுத்திட தீயணைப்புத் துறையின் மூலம் தகுந்த பாதுகாப்பு வாகனங்களை தயார்நிலையில் வைத்து உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திடவும் அறிவுறுத்தினார்.

பொதுமக்கள் தீபாவளியை முன்னிட்டு, அரசின் வழிகாட்டுதலின்படி, குறிப்பிட்ட நேரத்தில் தகுந்த பாதுகாப்புடன் வெடிகளை வெடித்திடவும், பட்டாசுக் கழிவுகளை தனியே சேகரித்து, அதனை தூய்மைப் பணியாளர்களிடம் வழங்கி மாநகராட்சிக்கு நல் ஒத்துழைப்பு வழங்கிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என தெரிவித்தார்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர் லால் குமாவத், வட்டார துணை ஆணையாளர்கள் எம்.பி.அமித், (தெற்கு), கே.ஜெ. பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), தலைமைப் பொறியாளர் (திடக் கழிவு மேலாண்மை) திரு.என்.மகேசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களைப் பயன்படுத்தி

இளைஞர்கள் தொழில் முனைவோராக உருவாக வேண்டும்!

செயின்ட் ஜோசப் கல்லூரி விழாவில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

செங்கல்பட்டு. நவ. 9 - செங்கல்பட்டு மாவட்டம், செம்மஞ்சேரி, செயின்ட் ஜோசப் கல்லூரியில் நேற்று (8.11.2023) நடைபெற்ற விழாவில் இந்தியாவின் முதல் Artificial Intelligence Incubator குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து உரையாற்றினார்.

அப்போது அவர் பேசிய தாவது :

இன்றைய விஞ்ஞான உலகில் மின்சாரத்திற்கு அடுத்தபடியாக உலகில் அனைத்து இடங்களிலும் பரவி இருப்பது கணினி வளர்ச்சி. தொழில்நுட்ப கல்வியில் கம்ப்யூட்டர் சயின்ஸ், இன்பர்மேஷன் டெக்னாலஜி, ரோபோடிக்ஸ், நானோ டெக்னாலஜி தற்போது புதிய துறையான ஆர்ட்டிபிசியல் இன்டலிஜென்ஸ் (Artificial Intelligence) மெக்கானிக் கல் லெர்னிங் (Mechanical Learning) வெர்ச்சுவல் ரியாலிட்டி (Virtual Reality) என்று பல்வேறு பிரிவுகளாக வளர்ச்சி அடைந்துள்ளது.

இந்தியா வெற்றிகரமாக செலுத்திய சந்திராயன்2 விண்கலம் நிலவின் தென் துருவத்தில் தரை இறங்கிய போது.அங்கிருந்த பெரும் பள்ளத்தை உடனடியாக கண்டறிந்து மாற்று இடத்தை தேர்ந்தெடுத்து அதில் வெற்றிகரமாக தரையிறங்கியது. இந்த வெற்றிக்கு பெரும் உதவியாக இருந்தது ஆர்ட்டிபிசியல் இன்டலிஜென்ஸ் எனும் (Artificial Intelligence) தொழில்நுட்பம் தான்.

வளர்ந்து வரும் Artificial Intelligence துறையின் மூலம் மாநில. ஒன்றிய தனியார் துறை களின் தகவல்களை பாதுகாக்கும் வகையில். இணையப் பாதுகாப்பு கட்டமைப்பை உருவாக்க ஒரு புதிய தொழில் நுட்பத்தை சிங்கப்பூரை தலைமையிடமாக கொண்டு ஆஸ்திரேலியாவில் இயங்கி வரும் ஹவே (HaiVE) நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்த தொழில் நுட்பத்தை நம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு பயிற்றுவிக்க இந்த Business Incubation Centre துவங்கி வைக்கப்பட்டுள்ளது. அதற்கு உதவியாக இருந்த ஹவே நிறுவனத்தின் உரிமையாளர் ஹெல்லெர் அவர்களுக்கும் இந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாக பொறுப்பினை ஏற்றுள்ள தமிழ் நாட்டை சேர்ந்த திருமதி தீபிகா லோகநாதனுக்கும் இவர்களுடன் இணைந்து செயலாற்றும் AI Venture Factory நிறுவனத்தின் CEO அர்ஜுனுக்கும் என் மனமார்ந்த பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான கழக அரசு தமிழ்நாட்டில் உள்ள. கல்லூரி மாணவர்களை இளம் தொழில்முனைவோர்களை வளர்த்தெடுக்க 101அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் தொழில் வளர் காப்பகங்கள் - Incubation Centres அமைத்து உள்ளது. இந்த இன்குபேஷன் சென்ட்டர்களை மேம்படுத்த ரூ. 19 கோடியே 84 லட்சம் அரசு வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 1545 கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் 31 இடங்களில் தொழில்முனைவோர் மையங்கள் Hubs அமைக்கப்பட்டு தொழில் துவங்க உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. இதில் பயிற்சி பெற்ற 50 மாணவர்களுக்கு தங்களின் புதிய கண்டுப்பிடிப்புகளுக்காக ரூ. 50 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புத்தாக்க சிந்தனைக் கொண்ட நம் இளைஞர்களையும், மாணவர்களையும் ஊக்கப்படுத்திட தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம, பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் ஆட்சி பொறுப்பேற்று. இது வரை 8 லட்சத்து 98 ஆயிரத்து 812 இளைஞர்கள் மற்றும் மாணவர் களுக்கு தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன். கடந்த 2 ஆண்டுகளில். 266 புதிய கண்டுப்பிடிப்பாளர்களுக்கு ரூ. 7 கோடியே 39 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

கழக அரசு பொறுப்பேற்றதிலிருந்து முதல்வர் அவர்கள் பள்ளி மாணவர்களின் மீது தனி கவனம் செலுத்தி வருகிறார்கள். 4,343 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில். 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தொழில்முனைவோர்களாக மாற விழிப்புணர்வும், ஆலோசனையும் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 40 மாணவ குழுக்களின் சிறந்த புதிய கண்டுபிடிப்புகளுக்கு தலா ரூ.25 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை ரொக்க பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படுகிறது. கடந்த ஜின் மாதம் நடைபெற்ற MSME தின விழாவில் முதல்வர் அவர்களின் திருக்கரங்களால் மாநில அளவில் வெற்றி பெற்ற 10 சிறந்த மாணவ குழுக்களுக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் ரூ.10 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

புதிய கண்டுபிடிப்புகளை வர்த்தக ரீதியாக சந்தைப்படுத்த. முதல்வர் அவர்கள் StartUp TN என்ற இயக்கத்தை துவக்கி. அதற்கான நிதியினை ஒதுக்கி புதிய திட்டங்களை அறிவித்து. செயல்படுத்தி வருகிறார். முதல்வர் அவர்களின் முன் மாதிரியான திட்டங்களால். StartUp தர வரிசையில் இந்திய அளவில் கடைசி இடத்திலிருந்த தமிழ்நாடு. 3ஆம் நிலைக்கு முன்னேறி "லீடர்" தகுதியை பெற்றுள்ளது. StartUp TN மூலம் இதுவரை 153 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு ரூ.41 கோடியே 96 லட்சம். பங்குகளாக முதலீடாக வழங்கப்பட் டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக 5 வகையான சுய தொழில் திட்டங்களை கழக அரசு செயல்படுத்தி வருகிறது. கடந்த 2 ஆண்டுகளில் NEEDSUYEGPPMEGP PMFME அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் ஆகிய 5 திட்டங்களின் கீழ். ரூ. 827 கோடியே மானியத்துடன். ரூ.2.503 கோடி வங்கி கடனுதவி வழங்கப்பட்டு. 28.325 புதிய தொழில்முனைவோர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர் இன்று துவங்கி வைக்கப்பட்டுள்ள Business Incubation Centre மூலம் புதிய தொழில் நுட்பத்தை கற்றுகொள்ளும் இளைஞர்கள் அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு சுய தொழில் திட்டங்களை பயன்படுத்தி நீங்களும் ஒரு தொழில் முனைவோராக உருவாக வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ. அன்பரசன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் MSME அரசு செயலர் திருமதி.அர்ச்சனா பட்நாயக், தொழில் துறை அரசு செயலர் அருண் ராய், பள்ளி கல்வி துறை செயலாளர் குமரகுருபரன், தமிழ் நாடு மின் ஆளுமை முகமை. Joint CEO ரமணா சரஸ்வதி. சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ். செயின்ட் ஜோசப் கல்வி குழும தலைவர் டாக்டர் பாபு மனோகரன். நிர்வாக இயக்குநர் சாஷி சேகர். Hiller Marine நிறுவன CEO மைக்கேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொழில் வளர் காப்பகங்கள்!

AI Venture Factory லாப நோக்கமற்ற அமைப்பாக மாணவர்களின் நலன் கருதி 15 மில்லியன் டாலர் முதலீட்டில் இந்தியாவிலேயே முதன் முதலாக சென்னையில் Business Incubation Centre ஐ துவக்கியுள்ளது. இதன் மூலம் ஆண்டுக்கு சராசாரியாக 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் இளைஞர்களுக்கு இந்த தொழில் நுட்ப பயிற்சி அளிக்கபட உள்ளது. இதில் பயிற்சி பெறும் இளைஞர்கள் மாணவ மாணவியர்கள் வேலைவாய்ப்பு கிடைப்பதுடன் சுய தொழில் தொடங்கவும் முடியும். இது போன்ற ஒரு பெரிய வாய்ப்பினை நம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு ஏற்படுத்தி கொடுத்த ஹெல்லெர் திருமதி தீபிகா லோகநாதன் அர்ஜுன் அவர்களுக்கும் மீண்டும் என் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	மொத்தம்
1	மே.பொ / கொநே / வ.செ.அ.மி.நி-2	141	1
2	மே.பொ / கொநே / வ.செ.அ.மி.நி-1	163	1
3	த.பொ / வ.செ.அ.மி.நி. - III	10	1

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணைய தளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in
செ.ம.தொ.இ/5924/ஒப்பந்தப்புள்ளி/2023

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
திருவண்ணாமலை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஓ.அ.எண். 36/2023–24/ தவஅ/ நாள்: 07.11.2023.
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், திருவண்ணாமலை (நெ), க(ம)ப கோட்டத்திற்குட்பட்ட தண்டராம்பட்டு (நெ), க(ம)ப, உட்கோட்டத்தைச் சார்ந்த சி.ஆர்.ஐ.டி.பி 2023–24, ஒரு பணிக்கு (TVM 36) இருஉறை முறையில் இணையவழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 22.11.2023 அன்று 12.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதரவிபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 10.11.2023 முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ./5919/ஒப்பந்தப்புள்ளி/2023
கண்காணிப்புப்பொறியாளர்(நெ), க(ம)ப, வட்டம், திருவண்ணாமலை

பெருநகர சென்னை மாநகராட்சி
பூங்கா (ம) விளையாட்டுதிடல்
பூ.து.ந.க.எண்.பி2/1959–8/2023
மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி (Re-e-Tender)
கண்காணிப்பு பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுத்திடல்) அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.
"சிங்கார சென்னை 2.0" திட்டத்தின் கீழ் மண்டலம்-7, கோட்டம்-80, பாண்டியன் தெரு, பிரகாஷ் நகர் (புதூர்) உள்ள புதிய பேட்மிண்டன் கோர்ட் (New Shuttle Court) மற்றும் கோட்டம்-85, நேரு தெரு, ஆசிரியர் காலனியில் புதிய விளையாட்டுத்திடல் அமைக்கும் பணி (சிப்பம்-8 (Two Cover System) மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி (Re-e-Tender)
பணியின் உத்தேச தொகை ரூ.69.64 லட்சம்
முன்வைப்பு தொகை : மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%
ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : 23.11.2023 அன்று மாலை 3.00 மணி வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : 24.11.2023 அன்று மாலை 3.30 மணி
மேலும் விவரங்களுக்கு www.tntendersgov.in இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.
செ.ம.தொ.இ / 5952 / ஒப்பந்தப்புள்ளி / 2023
கண்காணிப்பு பொறியாளர் (பூ (ம) வி)

ஈரோடு மாவட்டம், மாநகரம் 40 வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் பெய்த கன மழையினால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் பார்வையிட்டார். நிகழ்வில் பொறியாளர் விஜயகுமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், மண்டல குழு தலைவர்கள் ப.க.பழனிசாமி, குறிஞ்சி என். தண்டபாணி, மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இரா.ரமேஷ்குமார் கருங்கல்பாளையம் பகுதி கழக பொருளாளர் தி.க.முருகேஷ், உள்ளிட்ட பலர் உள்ளனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் 600 இடங்களில் நீட் விலக்கு, நம் இலக்கு கையெழுத்து இயக்கம்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

10.11.2023 வெள்ளிக்கிழமை காலை 8.00 - மாலை 7.00 மணி

காஞ்சிபுரம் மாநகரம்

பகுதி	தலைமை	முன்னிலை	வட்டங்கள்	மொத்தம்
1. 1வது பகுதி	சி.கே.வி.தமிழ்செல்வன்	கே.திலகர்	1,2,3,4,5,6,7,8,9,10,16,17,18	26 இடங்கள்
2. 2வது பகுதி	சி.கே.வி.தமிழ்செல்வன்	எஸ்.சந்துரு	19,20,21,22,23,24,25,26,27,28,29,30	24 இடங்கள்
3. 3வது பகுதி	சி.கே.வி.தமிழ்செல்வன்	அ.தசரதன்	31,32,33,34,35,36,45,46,47,48,49,50,51	26 இடங்கள்
4. 4வது பகுதி	சி.கே.வி.தமிழ்செல்வன்	சு.வெங்கடேசன்	11,12,13,14,15,37,38,39,40,41,42,43,44	26 இடங்கள்

15.11.2023 புதன்கிழமை காலை 8.00 - மாலை 7.00 மணி

நகரம்

நகரம்	தலைமை	வட்டங்கள்	மொத்தம்
1. மதுராந்தகம்	கே.குமார்	1 முதல் 24 வட்டங்கள்	24 இடங்கள்

ஒன்றியங்கள்

ஒன்றியம்	தலைமை	ஊராட்சிகள்	மொத்தம்
1. உத்திரமேரூர்	கெ.ஞானசேகரன்	38 ஊராட்சிகள்	38 இடங்கள்
2. சாலவாக்கம்	டி.குமார்	35 ஊராட்சிகள்	35 இடங்கள்
3. காஞ்சிபுரம் தெற்கு	க.குமணன்	16 ஊராட்சிகள்	16 இடங்கள்
4. காஞ்சிபுரம் வடக்கு	பி.எம்.குமார்	24 ஊராட்சிகள்	31 இடங்கள்
5. வாலாஜாபாத் தெற்கு	பி.சேகர்	30 ஊராட்சிகள்	30 இடங்கள்
6. வாலாஜாபாத் வடக்கு	பி.எம்.பாபு	31 ஊராட்சிகள்	24 இடங்கள்
7. மதுராந்தகம் வடக்கு	பி.எச்.சத்தியசாய்	23 ஊராட்சிகள்	23 இடங்கள்
8. மதராந்தகம் தெற்கு	பொன்.சிவகுமார்	35 ஊராட்சிகள்	35 இடங்கள்
9. அச்சிறுப்பாக்கம் வடக்கு	ஜி.தம்பு	27 ஊராட்சிகள்	27 இடங்கள்
10. அச்சிறுப்பாக்கம் தெற்கு	கே.கண்ணன்	32 ஊராட்சிகள்	32 இடங்கள்
11. சித்தாமூர் கிழக்கு	ஏ.சிற்றரசு	18 ஊராட்சிகள்	22 இடங்கள்
12. சித்தாமூர் மேற்கு	வி.ஏழுமலை	25 ஊராட்சிகள்	25 இடங்கள்
13. லத்தூர் வடக்கு	கே.எஸ்.ராமச்சந்திரன்	25 ஊராட்சிகள்	25 இடங்கள்
14. லத்தூர் தெற்கு	எம்.எஸ்.பாபு	16 ஊராட்சிகள்	16 இடங்கள்
15. திருக்கழுக்குன்றம் தெற்கு	இ.சரவணன்	11 ஊராட்சிகள்	11 இடங்கள்

பேரூர்

பேரூர்	தலைமை	வட்டங்கள்	மொத்தம்
1. உத்திரமேரூர்	என்.எஸ்.பாரிவள்ளல்	18 வார்டுகள்	18 இடங்கள்
2. வாலாஜாபாத்	என்.பாண்டியன்	15 வார்டுகள்	15 இடங்கள்
3. கருங்குழி	எ.சுந்தரமூர்த்தி	15 வார்டுகள்	15 இடங்கள்
4. அச்சிறுப்பாக்கம்	வி.டி.ஆர்.வி.எழிலரசன்	15 வார்டுகள்	15 இடங்கள்
5. இடைக்கழிநாடு	டி.மோகன்தாஸ்	21 வார்டுகள்	21 இடங்கள்

க.சுந்தர் எம்.எல்.ஏ.
செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாட்ட தி.மு.க.